செ.கு.எண் 79 நாள் 22.02.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 22.2.2012

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், முத்தனேந்தல் கிராமத்தில், மதுரை – இராமேஸ்வரம் நெடுஞ்சாலையில் 19.2.2012 அன்று திருப்பூர் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, முத்தனேந்தல் பஸ் நிறுத்தம் அருகே ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் இடைக்காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. காலிப் என்பவரின் மனைவி திருமதி ரம்ஜான் கனி, திரு. சமயமுத்து என்பவரின் மகன் பெரியசாமி ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயும், இவ்விபத்தில் படுகாயமடைந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் தங்கமணி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், பழனிச் செட்டிப்பட்டி கிராமத்தில் 21.2.2012 அன்று தேனியிலிருந்து கம்பம் சென்று கொண்டிருந்த ஜீப்பும், கம்பத்திலிருந்து தேனி நோக்கி வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்தும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில், ஜீப்பில் பயணம் செய்த கம்பம் வட்டம், வடக்குப்பட்டியைச் சேர்ந்த திரு. அங்கையன் என்பவரின் மனைவி திருமதி சுதா, திரு. சந்திரன் என்பவரின் மனைவி திருமதி மாலதி, திரு. ஒச்சாத் தேவர் என்பவரின் மகன் சந்திரன் மற்றும் ஆண்டிப்பட்டி வட்டம், தும்மக்குண்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் பகத்சிங் ஆகிய நால்வர் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், முத்தனேந்தல் கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் மூன்று நபர்கள் காயம் அடைந்துள்ளனர்

என்பதையும், தேனி மாவட்டம், பழனிச் செட்டிப்பட்டி கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் எட்டு நபர்கள் காயம் அடைந்துள்ளனர் என்பதையும் அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், சிவகங்கை மற்றும் தேனி ,மாவட்ட நிருவாகங்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9